6 மாதம் சிறை தண்டனை விதிக்கப்படும்

# மெட்ரோ ரயிலில் போஸ்டர் ஒட்டினால் நடவடிக்கை

- மெட்ரோ ரயில் நிறுவனம் எச்சரிக்கை

■ சென்னை

மெட்ரோ ரயில் கட்டமைப்புகளில் உள்ள தூண்களில் பேனர்கள், சுவரொட்டிகள் ஒட்டினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

மெட்ரோ ரயில் திட்டத்தின், தடுப்புகள் மற்றும் பிற கட்டமைப்புகள் மீது சுவரொட்டிகள் போன்றவற்றை ஒட்டக் கூடாது.

மெட்ரோ ரயில்வே சட்டம் 2002-ன் படி, சட்டவிரோத செயலாகும். ரயில் மீதோ, ரயில்வேயின் எந்த ஒரு கட்டமைப்பின் மீதோ, சுவரொட்டிகளை ஒட்டுபவர்களுக்கு 6 மாத காலம் வரை சிறைத்தண்டனையோ அல்லது சிறை தண்டனையுடன் சேர்த்து ரூ.1000 அபராதமோ விதிக்கப்படும். அல்லது இரண்டு தண்டனையும் வழங்கப்படும்.

## போலீஸ் நிலையங்களில் புகார்

விதிகளை மீறி விளம்பரம் செய்த, மெகா கிரியேட்டிவ் ஏஜென்சி, பல்லாவரம் இந்தியன் பவர் ஜிம், நவின் பிரஸ் உள்ளிட்ட 4 நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க போலீஸ் நிலையங்களில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.